**கிராமின் கிருஷி மவுசம் சேவா**

இந்திய வானிலை துறை

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்

கோவை, தமிழ்நாடு

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 12-09-2023**

**புதுக்கோட்டை(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2023-09-12 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)**

| வானிலை காரணி | 2023-09-13 | 2023-09-14 | 2023-09-15 | 2023-09-16 | 2023-09-17 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ ) | 3.0 | 0.0 | 0.0 | 3.0 | 3.0 |
| அதிக பட்ச வெப்பநிலை ( oசெ ) | 35.0 | 34.0 | 34.0 | 34.0 | 33.0 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (o செ ) | 28.0 | 28.0 | 28.0 | 27.0 | 27.0 |
| அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 70 | 70 | 70 | 70 | 70 |
| குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 30 | 30 | 40 | 40 | 40 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி ) | 10 | 14 | 12 | 14 | 16 |
| காற்றின் திசை (கோணம்) | 230 | 200 | 200 | 200 | 200 |
| மேக மூட்டம் (ஆக்டா) | 7 | 7 | 6 | 7 | 8 |

## வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

செப்டம்பர் 13,16 மற்றும் 17 ஆகிய தேதிகளில் லேசான மழைக்கு வாய்ப்புள்ளது . அதிகபட்ச வெப்ப நிலை 33.0°C- 35.0°Cஎனும் வேறுபாட்டிலும், குறைந்தபட்ச வெப்ப நிலை 27.0°C -28.0°Cஇருக்கும். வானம் அடுத்த ஐந்து நாட்களுக்கு மேகமூட்டத்துடன் காணப்படும். காற்றின் வேகம் மணிக்கு 10 -16 கிலோமீட்டர் வேகம் இருக்கும் என எதிர்பார்க்கலாம்.

## பொது ஆலோசனை:

விரிவாக்கப்பட்ட வரம்பு மழை முன்னறிவிப்பு : செப்டம்பர் 17 முதல் செப்டம்பர் 23 வரையிலான காலகட்டத்தில் தமிழ்நாடுட்டில் இயல்பானது மழை பெய்ய வாய்ப்பு உள்ளது . அதிகபட்ச வெப்பநிலை மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை இயல்பானது இருக்கும்.

## குறுஞ்செய்தி :

| |
|---|
| அதிகபட்ச வெப்பநிலை தொடர்ந்து உயர்வாக காணப்படுவதால் கால் நடைகளுக்கு நாள் ஒன்றக்கு 80 முதல் 100 லிட்டர்தண்ணிரை 4 தவணையாக பகிர்ந்து கொடுக்கவும். |

## பயிர் குறிப்பிட்ட ஆலோசனை:

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| உளுந்து | தற்போது நிலவும் பருவ சூழ்நிலையில் புரட்டாசி பட்டத்தில் பயறு வகை பயிர்கள் சாகுபடி செய்யும் விவசாயிகள் அதிக மகசூல் கொடுக்கக்கூடிய உளுந்து ராகம் வம்பன் 8 மற்றும் வம்பன் 10, பச்சை பயிறு வம்பன் 3 மற்றும் 4 ஆகிய ரகங்கள் இரங்களை தேர்வு செய்து விதைக்கவும் . விதைக்கும் முன் உளுந்தில் வேர் அழுகல் நோய் வராமல் தடுக்க விதையை டிரைகோடெர்மா விரிடி 4 கிராம்/கிலோ (அ) சூடோமோனாஸ் 10 கிராம்/கிலோ என்ற அளவில் விதை நேர்த்தி செய்யலாம். |
| நெல் | நெற்பயிரில் மஞ்சள் கரிப்பூட்டை நோய் (நெல் பழம்) வர வாய்ப்பு உள்ளது. நோயின் அறிகுறிகள் ஒவ்வொரு தனி தானியமும் மஞ்சள் நிற கனியுடலாக மாற்றம் அடைந்து காணப்படும். இதனை கட்டுப்படுத்த கதிர் இலைப்பருவம் மற்றும் பால்பருவங்களில் ஒரு ஏக்கருக்கு புரோப்பிகோனசோல் 25 இ.சி 200 மில்லி அல்லது காப்பர் ஹைட்ராக்சைடு 77 சதம் WP 500 கிராம் உடன் 200 லிட்டர் தண்ணீர்ணீகலந்து தெளிக்க வேண்டும். |

## தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை:

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| வாழை | தற்போது புரட்சி பட்டம் வாழை சாகுபடி செய்யவுள்ள விவசாயிகள் களையை கட்டுப்படுத்த இரத்தன்மை தக்க வைக்க வாழை நடவு செய்யும் போது இடையே உள்ள இடைவெளியில் தட்டைப் பயிரை ஊடுபயிராக பயிர் செய்ய வேண்டும் . |
| தக்காளி | தக்காளி பயிரில் தேமல் நோய் தாக்குதல் பரவலாக தென்பட வாய்ப்பு உள்ளது. இந்நோயின் அறிகுறியாக தாவரத்தில் வெளிர், பச்சை புள்ளி அமைப்புடனும் மேலும் இளம் இலைகள் வெயில் நாட்களில் வாடத் தொடங்கும். பாதிக்கப்பட்ட தாவரம் வளர்ச்சி குன்றி வெளிர் பச்சை நிறமாக காணப்படும். விதைகளை விதைப்பதற்கு ஒரு நாள் முன்பு ஒரு லிட்டர் தண்ணீருணீக்கு 90கி டிரைசோடியம் பாஸ்பேட் கரைசலில் ஊற வைப்பதன் மூலம் நோயைக் குறைக்கலாம். விதைகளை நன்கு அலசி நிழலில் உலர்த்த வேண்டும. பாதிக்கப்பட்ட தாவரங்களை கவனமாக அகற்றி அழித்து விட வேண்டும். வைரஸ்நோய் தொற்று கொண்ட நாற்றுகளை நடவிற்கு |

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| | பயன்படுத்த கூடாது. புகையிலை, உருளைக்கிழங்கு, மிளகாய், குடைமிளகாய், கத்தரி போன்றவற்றை தவிர மற்ற பயிர்களை பயிர் சுழற்சிக்கு பயன்படுத்த வேண்டும். |
| தென்னை | பகல் நேர வெப்பநிலை உயர்ந்து காணப்படுவதால் தென்னையில் சுருள் வெள்ளை ஈ தாக்குதல் தென்பட வாய்ப்புள்ளது. இதனை கட்டுப்படுத்த மஞ்சள் நிற ஒட்டும் பொறிகளை ஒரு ஏக்கருக்கு 5 அல்லது 6 இடங்களில் வைக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது. |
| முருங்கை | முருங்கை காய்க்கும் பருவம் அதிக வெப்பநிலை காரணமாக முருங்கையில் காய் ஈ தாக்குதல் வர வாய்ப்புள்ளது இதனை கட்டுப்படுத்த வேப்பங்கொட்டை சாறு 5 % என்ற அளவில் தெளிக்க வேண்டும். |
| கத்திரிக்காய் | காய்கறி பயிர்களை தாக்கும் பூச்சிகளை கட்டுப்படுத்த ஏக்கருக்கு ஒன்று என்ற எண்ணிக்கையில் சூரிய விளக்கு பொறி, ஏக்கருக்கு 8 என்ற எண்ணிக்கையில் இனக்கவர்ச்சி பொறி மற்றும் ஏக்கருக்கு 8 என்ற எண்ணிக்கையில் மஞ்சள் நிற ஒட்டும் அட்டை பொறிகளை பயன்படுத்தலாம். முன்னதாக நோய்களிலிருந்து பயிர்களை பாதுகாக்க 500 கிலோ தொழு உரத்துடன் ஒரு கிலோ டிரைக்கோடெர்மா விரிடி கலந்து கடைசி உழவின் போது இடவேண்டும். |
| வாழை | வாழைப் பயிரில் போரான்சத்து பற்றாக்குறை பரவலாக தென்பட வாய்ப்பு உள்ளது. இவற்றின் முக்கிய அறிகுறியாக இலைக்குருத்துக்கள் விரியாமல். இளம் இலைகள் கிழிந்து, பழுப்பு நிறமாக மாறும். இதனை நிவர்த்தி செய்ய: 100 லிட்டர் தண்ணீரில் 200 கிராம் போராக்ஸ் அல்லது 1 லிட்டர் தண்ணீருக்கு 2கிராம் போரிக் அமிலம் கலந்த கரைசலை, இலைகளின் மேல் தெளிக்க வேண்டும். பொதுவாக மருந்து தெளிக்கும் வேலைகளை மழை இல்லாத நாட்களில் மேற்கொள்ளவும். |

## உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை:

| உயிருள்ள விலங்குகள் | உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| பசு | வெயில் பகல் நேரங்களில் அதிகமாக இருப்பதால் கறவை மாடுகளின் மேல் தண்ணீர் தெளித்து அதன் வெப்பத்தை தணிப்பது மூலம் பால் உற்பத்தி குறையாமல் பாதுகாக்கலாம் . மேலும் அசோலா பசுந்தீவனம் மாக பயன்படுத்தலாம் . |

## கோழிப்பண்ணை குறிப்பிட்ட ஆலோசனை:

| கோழிப்பண்ணை | கோழிப்பண்ணை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| கோழி | கோழிகளைத் தாக்கும் கழிச்சல் நோய் தாக்குதல் பரவலாக தென்பட வாய்ப்பு உள்ளது. நோய் தாக்கப்பட்ட கோழிகளை தனியாக பிரித்து வைத்து பராமரிக்க வேண்டும். பின் நோய் பாதிக்கப்பட்ட மற்றும் நோய் பாதிக்கப்படாத கோழி மற்றும் குஞ்சுகளுக்கு 1 லிட்டர் தண்ணீரிணீல் 2கிராம் மைக்ரசால் பவுடர் அல்லது 2கிராம் பேக்டிரிசால் பவுடர் மருந்துகளில் ஏதேனும் ஒன்றுடன் 5 மில்லி வைம்ரால்சிரப் இரண்டையும் கலந்து அனைத்து கோழிகளுக்கும் 5 நாட்களுக்கு காலை மாலை என 2 வேளை குடிக்க கொடுக்க வேண்டும். |

## பிற ( மண்/ நில தயாரிப்பு) குறிப்பிட்ட ஆலோசனை:

| பிற ( மண்/ நில தயாரிப்பு) | பிற ( மண்/ நில தயாரிப்பு) குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| பொது ஆலோசனை | மண் வளத்தை மேம்படுத்தி அதிக மகசூல் பெற ஏக்கருக்கு 20 கிலோ சணப்பை அல்லது தக்கைபூண்டு ,நவதானியத்தை விதைத்து அவை பூக்கும் முன்பு 30 - 45 நாட்களுக்குள் மடக்கி உழ வேண்டும் . |